அமெரிக்கா - ஈரான் போரின் தாக்கத்தால்

# வணிக சிலிண்டர் விலை ரூ.993 அதிகரிப்பு

**ஓட்டலில் உணவு, தேநீர் விலை, டெலிவரி கட்டணம் மேலும் உயரும்**

புதுடெல்லி/ சென்னை

ஈரான் போர்ச் சூழலால் சர்வதேச சந்தையில் நிலவும் பதற்றங்களுக்கு மத்தியில் வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை மத்திய அரசு ரூ.993 உயர்த்தியுள்ளது. கடந்த 3 மாதங்களில் மட்டும் வணிக சிலிண்டர் விலை 81 சதவீதம் அளவுக்கு உயர்ந்துள்ளது. இதனால், ஓட்டல்களில் உணவு மற்றும் தேநீர் விலை மேலும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்க, இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியதால் உலக அளவில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், 19 கிலோ எடையுள்ள வணிகப் பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டர் விலையை மத்திய அரசு நேற்று ரூ.993 வரை உயர்த்தியுள்ளது.

இதனால், சென்னையில் வணிக சிலிண்டர் விலை ரூ. 990.50 அதிகரித்து ரூ.3,237-க்கு விற்பனையாகும். தலைநகர் டெல்லியில் ரூ.2,078.50-க்கு விற்பனை செய்யப்பட்ட சிலிண்டர், இனி ரூ.3,071.50-க்கு விற்பனை செய்யப்படும். மும்பையில் ரூ.2,031-ல் இருந்து ரூ.3,024 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் போர் தொடங்கியதில் இருந்து வணிக சிலிண்டர் விலை உயர்த்தப்படுவது இது 3-வது முறை. மார்ச் மாதத்தில் ரூ.144, ஏப்ரல் 1-ல் ரூ.200 என உயர்த்தப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் விலை அதிகரித்துள்ளது.

வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை உயர்வு உணவகங்கள் மற்றும் சிறு தொழில்களைப் பெரிதும் பாதிக்கும் என அஞ்சப்படுகிறது. இந்த சுமையை மக்கள் மீது சுமத்தும் வகையில் உணவுப் பண்டங்கள், தேநீர் விலை மற்றும் உணவுப் பொருள் டெலிவரி கட்டணத்தை ஓட்டல்கள் மேலும் அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது.

இதுகுறித்து பொருளாதாரப் பேராசிரியர் விகாஸ் பிரகாஷ் சிங் கூறும்போது, "ஈரான் போரின் தாக்கம் இந்தியாவிலும் எதிரொலிக்கும் என்று தெரிகிறது. உணவகங்களில் உணவுப் பண்டங்கள் விலை மேலும் உயர்ந்து, பில்கள் அதிர்ச்சி தரக்கூடும். சிறிய சிலிண்டர்களை நிரப்ப முடியாத நிலை, ஏழை எளிய மக்களை கவலையடையச் செய்துள்ளது" என்றார்.

**வீட்டு சிலிண்டர் விலை உயரவில்லை**

வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை உயர்ந்துள்ள போதிலும், வீட்டு உபயோகத்துக்கான சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கான எரிபொருள் விலையும் உயர்த்தப்படவில்லை. இது சாமானிய மக்களுக்குப் பெரும் நிவாரணமாகக் கருதப்படுகிறது. அதே நேரம், சர்வதேச விமான எரிபொருள் விலை 5 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளதால் சர்வதேச விமான பயணத்துக்கான கட்டணம் கணிசமாக அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.



உலகளாவிய எண்ணெய் விலை உயர்ந்த போதிலும், சுமார் 4 ஆண்டுகளாக பெட்ரோல் விலை மாற்றமின்றி இருப்பதால், அரசுக்குச் சொந்தமான எரிபொருள் நிலையங்கள், ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூ.20 மற்றும் டீசலுக்கு ரூ.100 நஷ்டத்தை சந்தித்து வருவதாக கூறப்படுகிறது.

தற்போதைய சூழலில், பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.25 முதல் ரூ.28 வரை உயர்த்தப்பட வாய்ப்பு உள்ளதாக சந்தை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**முதல்வர் ஸ்டாலின் கண்டனம்**

முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது:

தேர்தலுக்கு முன்பே கணித்தது போல, தேர்தல் முடிந்ததும் சமையல் எரிவாயு விலையை உயர்த்தியுள்ளது மத்திய பாஜக அரசு. உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தபோது, அதன் பலனை மக்களுக்கு அளிக்கவில்லை. இப்போது மேற்காசியப் போர் என்ற நெருக்கடியை வைத்து, மக்களின் நலனை எண்ணாமல், விலையை ஏற்றுவது சரியல்ல. விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**சங்க நிர்வாகிகள் கருத்து**

சென்னை ஓட்டல் அசோசியேஷன் தலைவர் எம்.ரவி:

மிகவும் அதிகமான விலையேற்றம் இது. இதனால் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள். ஏற்கெனவே பெரும்பாலான இடங்களில் 50 சதவீத சிலிண்டர்கள் தான் கிடைக்கின்றன. இந்நிலையில் இல்லாத சிலிண்டருக்கு இவ்வளவு விலை கொடுப்பது நியாயமற்றது. ஏற்கெனவே வணிக சிலிண்டர் தட்டுப்பாட்டால் தமிழகம் முழுவதும் 25 சதவீத சிறிய கடைகள் மூடப்பட்ட நிலையில், அதில் இருந்து தற்போது தான் மீண்டு வந்து கொண்டிருந்தோம். இந்த நேரத்தில் மீண்டும் விலையேற்றம் அதிர்ச்சி அளிக்கிறது.

சென்னை பெருநகர டீக்கடை உரிமையாளர் சங்க செயலாளர் சுந்தரம்:

அமெரிக்கா - ஈரான் போர் சூழல் நிலவி வருவதால் டீக்கடைகளுக்கு வணிக சிலிண்டர்கள் விநியோகம் செய்வதை ஏஜென்சிகள் நிறுத்திவிட்டன. ரூ.5 ஆயிரம், ரூ.6 ஆயிரம் கொடுத்து கள்ள சந்தையில்தான் வணிக சிலிண்டர் வாங்கி வியாபாரம் செய்து வருகிறோம். இவ்வாறு ஏஜென்சிகளேகூட கூடுதல் விலைக்கு சிலிண்டர்களை விற்று அதிக லாபம் பார்க்கின்றனர். வணிக சிலிண்டர் தட்டுப்பாட்டால் ஏற்கெனவே சென்னையில் 10 சதவீத டீக்கடைகள் மூடப்பட்டுவிட்டன. ஓட்டல்களில் உணவுப் பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்து விட்டது. இந்த சூழலில், மீண்டும் ஆயிரம் ரூபாய் விலையேற்றம் என்பது மேலும் அதிர்ச்சி அளிக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.






# மும்பை தாராவி மறுசீரமைப்புத் திட்டம் மனிதகுல மாற்றத்துக்கான பெரிய முயற்சி

## தொழிலதிபர் கவுதம் அதானி நெகிழ்ச்சி

புதுடெல்லி

"மும்பை தாராவி மறுசீரமைப்புத் திட்டம் என்பது மனிதகுல மாற்றத்துக்காக உலகிலேயே மேற்கொள்ளப்படும் மிகப் பெரிய சவாலான முயற்சியாகும்" என்று அதானி குழுமத்தின் தலைவர் கவுதம் அதானி நேற்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

மே தினத்தையொட்டி தனது குழுமத்தைச் சேர்ந்த 4 லட்சத்துக்கும் அதிகமான ஊழியர்களிடையே கவுதம் அதானி நேற்று உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

மும்பை தாராவி மறுசீரமைப்புத் திட்டம் எனது வாழ்நாளில் நான் எதிர்கொள்ளும் மிகவும் சவாலான பணிகளில் ஒன்று. அது எனது இதயத்துக்கு மிக நெருக்கமானதும் கூட. இது வெறும் கட்டுமானத் திட்டம் மட்டுமல்ல; மனிதகுல மாற்றத்துக்காக உலகிலேயே மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய சவாலான முயற்சியாகும்.

ஆசியாவின் மிகப்பெரிய குடிசைப் பகுதியாகவும், மும்பையின் மிக நெருக்கமான மக்கள் குடியிருப்புப் பகுதியாகவும் தாராவி அறியப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில், தாராவி திட்டத்தை செயல்படுத்துவதைத் தொழில்முறை ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் இதை ஒரு பெரும் பொறுப்பாகவே கருதுகிறேன். இதில் உள்ள இமாலய சவால்களை முழுமையாக உணர்ந்தே இப்பணியை நான் ஏற்றுக் கொண்டேன்.

இதனை நாங்கள் லாப நோக்கத்துக்காகச் செய்யவில்லை. ஒரு வகையில், தாராவி நமது கூட்டுத் தோல்வியின் அடையாளமாகத் திகழ்வதால், அந்த நிலையை மாற்றியமைக்கும் கடமையும் பொறுப்பும் நமக்கு உள்ளது.



மும்பை தாராவி குடிசைப்பகுதி (கோப்புப் படம்)



கவுதம் அதானி

### உத்வேகம் அளிப்பவை

தாராவி மக்களின் மன உறுதி பாராட்டுதலுக்கு உரியது. அங்கு வசிக்கும் மக்களின் உழைப்பும், முன்னேறத் துடிக்கும் அவர்களின் வேட்கையும், போராட்டங்களுக்கு இடையிலும் தளராத அவர்களின் மன வலிமையும் எனக்கு எப்போதும் உத்வேகம் அளிப்பவையாக உள்ளன.

எனினும், அவர்களுக்கு உரிய வாழ்க்கைத் தரத்தை நம்மால் இதுவரை வழங்க முடியவில்லை. அந்த நிலையை மாற்றவே தாராவி திட்டத்தைச் சவாலாக ஏற்று செயல்படுத்த ஒப்புக்கொண்டேன்.

இவ்வாறு அதானி கூறினார்.

### கூட்டு முயற்சி

மகாராஷ்டிர அரசு மற்றும் அதானி குழுமத்தின் கூட்டு முயற்சியாக, சிறப்பு நோக்கு நிறுவனம் (எஸ்பிவி) மூலம் பொது - தனியார் பங்களிப்புடன் மும்பை தாராவி மறுசீரமைப்புத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது உலகின் மிகப்பெரிய நகர்ப்புற புத்துயிரூட்டல் திட்டம் என்றும், மும்பையைக் குடிசைகளற்ற நகரமாக மாற்றுவதற்கான முதல் அடி என்றும் வர்ணிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், தாராவியில் தகுதியுள்ள குடியிருப்பாளர்களுக்குத் தனித்தனியாகச் சமையலறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கூடிய குறைந்தபட்சம் 350 சதுர அடி பரப்பளவு கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் வழங்கப்பட உள்ளன. இது மும்பையின் வழக்கமான குடிசை மறுவாழ்வுத் திட்டங்களை விட 17 சதவீதம் கூடுதல் இடவசதி கொண்டதாக இருக்கும்.

# 7 முக்கியத் துறைகளில் அந்நிய நேரடி முதலீடு

## சீனத் தொடர்புடைய நிறுவனங்களுக்கு நிபந்தனையுடன் அனுமதி

புதுடெல்லி

நாட்டின் உள்நாட்டு உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், அந்நிய முதலீடுகளை ஈர்க்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம் 2025-26 நிதியாண்டில் மொத்த அந்நிய நேரடி முதலீடு 9,000 கோடி டாலரை எட்டும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவுடன் நில எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள், ஒரு நிறுவனத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவான பங்குகளை வைத்திருந்தால், அதற்கு தானியங்கி முறை மூலம் அனுமதி வழங்க மத்திய அமைச்சரவை கடந்த மார்ச் 10-ம் தேதி ஒப்புதல் அளித்தது. இது தொடர்பான முறையான அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.

தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை இது குறித்த முதற்கட்ட அறிவிப்பை வெளியிட்டிருந்தாலும், அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டத்தின் கீழ் சில திருத்தங்களை மேற்கொள்வது குறித்து அமைச்சகங்களுக்கு இடையேயான ஆலோசனைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இது குறித்து டிபிஐஐடி இணைச் செயலாளர் ஜெய் பிரகாஷ் சிவஹாரே கூறுகையில், "பொருளாதார விவகாரங்கள் துறை அந்நிய முதலீடு குறித்த அறிவிப்பை ஃபெமா சட்டத்தின் கீழ் வெளியிடும். தற்போதைய சட்டங்களுடன் புதிய விதிகளை ஒருங்கிணைக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன. இது மிக விரைவில் நடைமுறைக்கு வரும்" என்றார்.

புதிய விதிகளின் மூலம் தேங்கிக் கிடக்கும் சுமார் 600 முதலீட்டு விண்ணப்பங்களுக்கு விரைவில் தீர்வு காண முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ள 7 முக்கியத் துறைகளில், அரிய வகை நிரந்தர காந்தங்கள், அரிய வகை தாதுக்கள் சுத்திகரிப்பு, பாலிசிலிக்கான்- இங்காட்-வேஃபர், மேம்பட்ட பேட்டரி பாகங்கள், மின்னணு பாகங்கள் தயாரிப்பு மூலதனப் பொருட்கள் உற்பத்தி, மின்னணு மூலதனப் பொருட்கள் உற்பத்தி ஆகியவை அடங்கும். இந்தத் துறைகளில் விண்ணப்பிக்கும் தகுதியுள்ள நிறுவனங்களுக்கு 60 நாட்களுக்குள் அனுமதி வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

அதேநேரம், சீனா, ஹாங்காங், பாகிஸ்தான் அல்லது வங்கதேசம் ஆகிய நாடுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு தானியங்கி முறை அனுமதி பொருந்தாது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது" என்றார்.

### இந்திய – பசிபிக் கடல் பிராந்தியத்தில் இந்தியா வலுவடைய

# கிரேட் நிகோபார் திட்டங்கள் மிகவும் அவசியம்

## மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி

இந்திய பெருங்கடல் – பசிபிக் கடல் பிராந்தியத்தில் இந்தியா வலுவடைய கிரேட் நிகோபார் உள்கட்டமைப்பு திட்டங்கள் மிகவும் அவசியம் என்று மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி அண்மையில் நிகோபார் தீவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறும்போது, "கிரேட் நிகோபார் திட்டம், இயற்கை மற்றும் பழங்குடி மக்களுக்கு எதிரான மிகப்பெரிய மோசடி" என்று குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது:

கிரேட் நிகோபர் திட்டத்தின் கீழ் ரூ.81,000 கோடியில் 4 முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.



நிக்கோபார் தீவின் கடற்கரை. (கோப்புப்படம்)

ஆசியா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையே பயணிக்கும் சரக்கு கப்பல்களை சிங்கப்பூர், கொழும்பு துறைமுகங்கள் கையாள்கின்றன. இதற்கு மாற்றாக இந்தியாவின் நிகோபார் தீவின் கலாத்தியா வளைகுடாவில் மிகப்பெரிய துறைமுகம் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் சர்வதேச கடல் வணிக போக்குவரத்தில் இந்தியா மிக முக்கிய இடத்தைப் பிடிக்கும். மேலும், ராணுவத்துக்குப் பயன்படும் வகையிலும் இந்தத் துறைமுகம் இருக்கும்.

நிகோபார் தீவில் பிரம்மாண்ட கிரீன்பீல்ட் சர்வதேச விமான நிலையம் கட்டப்பட உள்ளது. இதுவும் ராணுவ பயன்பாட்டுக்கும் ஏற்றதாக வடிவமைக்கப்படும். இதன்மூலம் சுற்றுலா, சரக்கு போக்குவரத்து மேம்படும். விமானப் படையின் வலுவான தளமாகவும் செயல்படும்.

நிகோபர் தீவில் குடியிருப்பு பகுதிகள், வணிக வளாகங்கள், சுற்றுலா வசதிகள், பாதுகாப்பு உள்கட்டமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரம்மாண்ட ஒருங்கிணைந்த நகரம் உருவாக்கப்பட உள்ளது. இந்த நகரத்தில் 5 லட்சம் பேர் வரை வசிக்க முடியும்.

### மின் உற்பத்தி நிலையம்

துறைமுகம், விமான நிலையம், ஒருங்கிணைந்த நகரம் ஆகியவற்றுக்கு மின்சாரம் விநியோகம் செய்ய எரிவாயு மற்றும் சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்.

கிரேட் நிகோபார் துறைமுக திட்டத்தால் இந்தியாவின் கடல் வழி வர்த்தகம் அதிகரிக்கும். வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். சுற்றுலா துறை மேம்படும். கணிசமான முதலீடுகள் குவியும். இந்திய பெருங்கடல், பசிபிக் கடல் பிராந்தியத்தில் இந்தியா வலுவடைய கிரேட் நிகோபார் உள்கட்டமைப்பு திட்டங்கள் மிகவும் அவசியம். இந்த திட்டத்தால் அந்தமான்- நிகோபார் தீவுகளில் 1.82 சதவீத காடுகள் மட்டுமே அழிக்கப்படும். இதனால் சுற்றுச்சூழலுக்கு மிகப்பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது.

இவ்வாறு மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.